Commerce
வகுப்புக்கள்
ஆரம்பம்:
01 — 02 — 86
சனி காலை 8 மணி
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ-1/=

Commerce
வகுப்புக்கள்
88 August
பொருளியல் - திரு. குமாரவேல்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
வர்த்தகம் - திரு. ஜெயராமன்
இந்துநாகரிகம் - திருமதி அருள்நங்கை
அளவையியல் - திரு. சந்திரராஜா
தமிழ் - திரு. பாலா
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

ஏடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞு தை மீ உ 28 திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 30 (10:02:1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-72

# எமது முயற்சியில் அக்கறை இல்லையா?

# இலங்கை அரசே, நேரடியாகச் சொல்லு!

## மாலைதீவில் ராஜீவ் கர்ச்சனை

### கூட்டணியின் யோசனை நியாயமானது அதனைப் பரிசீலனை செய்வது அவசியம்

மாலே (மாலைதீவு), பெப். 9

இலங்கை இனப்பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைக்க நாம் முயற்சித்து வருகிறோம்.

இலங்கையின் ஜெயவர்த்தன அரசுக்கு எமது முயற்சிகளில் அக்கறை இல்லையானால், அதனை எம்மிடம் நேரடியாகச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு வெட்டு ஒன்று. துண்டு இரண்டு என்ற விதத்தில் விளக்கம் கேட்டுக் கர்ச்சித்தார் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி.

மாலைதீவில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பு முன்னர் பிரதமர் ராஜீவ் செய்தியாளர் மாநாடு ஒன்றை இங்கு நடத்தினர்.

அப்போதே இலங்கையின் ஒளித்து விளையாடும் செயலைச்சண்டிக்கும் விதத்திலும், தெளிவான நிலையை அறியும் விதத்திலும் அவர் விளக்கம் கேட்டுக் கர்ச்சித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகள் நியாயமானவை. அவற்றை இலங்கை அரசு பரிசீலனை செய்தாக வேண்டும் என்றும் திரு. ராஜீவ் செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மாலைதீவில் 3 நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பு முன்னர் செய்தியாளர் மாநாட்டில் திரு. ராஜீவ் காந்தி பேசினர்.

அச்சமயம் இலங்கை இனப்பிரச்சினை பற்றி அவரிடம் கேட்கப்பட்டது.

அவர் சொன்னதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் நியாயமானவை. இவற்றை இலங்கை அரசு பரிசீலனை செய்ய வேண்டும்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா முயற்சிகள் எடுத்து வருகின்றது.

இந்த முயற்சிகளில் இலங்கைக்கு அக்கறை இல்லை என்ருல் அதை இலங்கை அரசாங்கம் எமக்கு நேரடியாகச் சொல்லி விடவேண்டும்.

இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவில் உள்ளனர். அவர்களை இலங்கைக்குத் திருப்பி அழைக்க வேண்டும். அதற்கு ஏற்ற சுமுக சூழ்நிலையை இலங்கை அரசு தான் உருவாக்க வேண்டும்.

**அப்பாவிகள் கொலை**

இலங்கையில் வன்செயல்கள் அதிகரிக்கின்றன. அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இந்தியாவுக்கு இது விசனத்தையும் அதிருப்தியையும் கவலையையும் தருகின்றது.

இப்படி திரு. ராஜீவ் காந்தி சொன்னர்.



ராஜீவ் காந்தி

### அவர்களின் அறிவித்தல் இது

திருகோணமலை, பெப். 10

நிலாவெளியில் உள்ள ஆயுதப்படை முகாம் மீது போராளிகள் தாக்குதல் ஒன்றைநடத்தியதாகவும் அரசுப்படைகள் அதை முறியடித்து விட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

கடந்த சனி (8 2.86) இரவுஇத்தாக்குதல்இடம் பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் கூறின.

## அலன் தம்பதிகள் இம்மாத இறுதியில் இலங்கை வருகை

### தமிழர் பிரச்சினை பற்றி ஜே. ஆருடன் பேசுவர்

— அலுவலகச் செய்தியாளர்:- வனிதராஜன் —

யாழ்ப்பாணம், பெப் 10

அமெரிக்கர்களான அலன் தம்பதிகள், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிஜனுதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன்பேசுவதற்காக இம்மாத இறுதியில் இலங்கை வருவார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை விடுத்து அரசியல் தீர்வு ஒன்றைக்காண நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் திரு ஜெயவர்த்தனவைநேரில்கண்டுபேசி வற்புறுத்துவார்கள்.

சிறையில் வாடும் அப்பாவித் தமிழர்களை விடுதலைசெய்யும்படியும்அவர்கள் ஜனுதிபதியைக் கேட்பார்கள்.

அலன் தம்பதிகள் 1984 நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தொழில் செய்த போது ஈழப் புரட்சிகர விடுதலைமுன்னணிஅமைப்பினுல்கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் இலங்கை தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்றும், சுதந்திரத்திற்காகப் போராடும் போராளிகள் என்றும் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் துணிச்சலுடன் வர்ணித்தவர்கள்.

### ஹர்த்தால் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். பெப்,10

யாழ்நகர் 24 மனை செட்டியார் மகாஜன இனத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டதை கண்டித்து இன்று நடைபெற இருந்த ஹர்த்தால் மறியல் போராட்டம் நாளை மறுதினம் (புதன்கிழமை) வரை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

செட்டியார் மகாஜன சங்கத்தைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

## செய்திச் சாரம்

### பிலிப்பீன்ஸ் தேர்தல்

லண்டன், பெப்.9

பிலிப்பீன்ஸ் ஜனுதிபதித் தேர்தலில் ஆளும் ஜனுதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் நாலரை லட்சம் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று முன்னணியில் திகழ்வதாக பிலிப்பீன்ஸ் தேர்தல் கமிஷன் இன்று அறிவித்தது.

எனினும் அமெரிக்க அவதானிகள் குழு இரண்டரை லட்சம் அதிகப்படியான வாக்குகளினுல் முன்னணியில் நிற்பதாக தெரிவித்தது.

பிலிப்பீன்ஸ் தேர்தலில் மோசடி, தில்லுமுல்லு, ஆள்மாருட்டம், பயமுறுத்தல் ஆகியவை ஆளும் கட்சியினுல் பெருமளவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவதானிகள் குழு குற்றம் சாட்டியிருக்கிறது.

### ரயில் விபத்தில் 140 பேர் பலி

ஒட்டாவா, பெப் 9

கனடாவில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நிகழ்ந்த பயங்கரமான ரயில் விபத்து ஒன்றில் 140 பேர் மாண்டனர். மேலும் நூற்றுக்கணக்கானேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆயிரத்துக்கும் அதிகமானேர் இந்த விபத்தில் படுகாயமடைந்தனர்.

பயணிகள் ரயில் ஒன்றும், சரக்கு ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. உலகின் மிக மோசமான ரயில் விபத்துகளில் இதுவும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

சுக்குநூருகிக் கிடக்கும் ரயில் பெட்டிகளில் இருந்து கிளம்பும் தீச்சுவாலையும், புகையும் மீட்புப் பணிகள் தொடர்வதை தடைசெய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண்ணை விடுவிக்க ஈரோஸ் தயார்

சென்னை, பெப். 9

கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் திருமதி வில்லிஸ் பெனிலோப்பை விடுதலை செய்ய ஈழப் புரட்சி அமைப்பு இணங்கி உள்ளது.

ஈரோஸ் இயக்கப் பிரமுகர் பாலகுமார் இத்தகவலை கூறியதாக பி. ரி. ஐ. செய்தி வெளியிட்டது.

சென்னையில் உள்ள பிரிட்டிஷ் உதவித் தூதுவர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து தான், பிரிட்டிஷ் பெண்ணை விடுவிக்க ஈரோஸ் இயக்கம் முன்வந்திருக்கிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இப் பெண்ணை ஒப்படைப்பதற்கு ஈரோஸ் விடுத்த நிபந்தனையை இலங்கை அரசு ஏற்க மறுத்ததனுல் தான் இத் தாமதம் ஏற்பட்டதாகவும் 'பிரிஜ' செய்தி கூறுகிறது.

பெண்ணை விடுவிக்க இலங்கை அரசு அக்கறை காட்டா விட்டால், அவர் மீது நீதி விசாரணை நடத்தப்படும் என்று ஈரோஸ் அறிவித்ததைத் தொடர்ந்தே–

ஈரோஸ் இயக்கத்துடன் சென்னையில் உள்ள பிரிட்டிஷ் துணை தூதுவர் தொடர்பு கொண்டார்.

அதன் பின்னரே, திருமதி. பெனிலோப்பை விடுவிக்க ஈரோஸ் இணங்கியது.

### புதுடில்லியில் ஹர்த்தால்

புதுடில்லி, பெப்.10

புதுடில்லியில் இன்று (திங்கட் கிழமை) ஹர்த்தால் ஒன்றை நடத்துவதற்கு இந்திய எதிர்க்கட்சிகள் முன்னேற்பாடு செய்திருக்கின்றன.

பாவனைப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தே இந்த ஏற்பாடு.

## மூதூரில் கைதான இளம் பெண்களில் ஒருவரின் கதை

## "அடிக்கிருன்கள்! அடிக்கிருன்கள்!!" சித்தப்பிரமையால் கத்துகிருர் இளம் பெண்

### பொலீஸார் கூட்டிச் சென்றபோது சுகதேகியாக இருந்தார் என்கிருர் தந்தை

— திருமலை மாவட்டச் செய்தியாவர் —

திருகோணமலை, பெப்.10

''அடிக்கிருன்கள்!, அடிக்கிருன்கள்!!'' என்று சித்தப்பிரமையில் கத்துகிருர் ஓர் இளம்பெண்.

மூதூரில் கடந்த சனிக்கிழமை கைதான இளம் பெண்களில் ஒருவரே இப்படி சித்தப்பிரமை பிடித்துக் கத்துவதாக அப் பெண்ணின் தந்தையார் முறையீடு செய்திருக்கிருர்.

மூளை பாதிக்கப்பட்ட நிலையில் தனது மகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்ருர் என்று தந்தை நேற்று திருகோணமலை பிரஜைகள் குழுவிடம் எழுத்துமூலம் முறையிட்டார்.

மூதூரைச்சேர்ந்த ஆசிரியர் திரு. ஒப்பிலாமணி குலநாதன். இவரது மகள் வனஜா, வயது 22.

வனஜாபற்றி தந்தை குலநாதன் திருமலை பிரஜைகள்குழுவிடம் சமர்ப்பித்த முறைப்பாட்டில் கூறியிருப்பதாவது:-

கடந்த சனிக்கிழமை மாலை 6·45 மணியளவில் பொலீஸார் வந்து எனது மகளை (வனஜாவை) விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கரடிப்போக்கு மதகு தகர்க்கப்பட்டது

பரந்தன், பெப். 10

கிளிநொச்சி கரடிப்போக்கு மதகு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

நேற்றுக் காலை சுமார் 10 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தினுல் யாழ்ப்பாணம் கிளிநொச்சிக்கு இடையிலான போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டது.

வாகனங்கள் பல மைல் சுற்றிவரவேண்டிய நிலை ஏற்பட்டது.

### ஒப்படைப்பு

பிரிட்டனில் உள்ள இந்திய பயங்கரவாதிகளை பிரிட்டன் இந்தியாவிடம் ஒப்படைக்கும்.

பிரிட்டன், இந்திய பேச்சுவார்த்தைகளில இப்படி இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவைச் சங்கம் இப்படிச் செய்தால் மட்டுமே விடுதலையாம்

சென்னை, பெப். 9

கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் வில்லிஸை விடுவிப்பதற்கு தமது இயக்கம் இணக்கம் தெரிவித்த போதிலும், அதற்கெனச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக ஈரோஸ் இயக்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் இலங்கைக்குச் சென்று வில்லிஸைக் கையேற்பதற்கு முன்னர் முல்லைத்தீவு, மூதூர், திருகோணமலை ஆகிய மூன்று இடங்களுக்குமாவது சென்று அங்குள்ள நிலைமைகளையும்–

தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் நேரில் சென்று அறிய வேண்டும்.

அவ்வாறு நேரில் சென்றதை ஊர்ஜிதப்படுத்திய பின்னரே வில்லிஸை எங்கு வைத்து, எப்போது கையளிப்பது என்பது பற்றி தீர்க்கமாக முடிவு செய்யப்படும்.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### முச்சந்திமுரளி



அம்மாவின்ரை பிள்ளை தான் எண்டதை இனியாகுதல் காட்ட வேணும் எண்டு ராஜீவ் நினைசசிட்டார்! போலை.

### தமிழ் இளைஞர்கள் மூதூரில் கைது

திருகோணமலை, பெப்.10

மூதூரில் நேற்று 12 தமிழ் இளைஞர்கள் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அனைவரும் விசாரணைக்காக திருமலை ஆயுதப்படை முகாமிற்குக் கொண்டு வரப்பட்டனர்.

### சுபநேரம்

10.2.1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12 34 முதல் 2.04 வரை

ராகுகாலம்:

8.04 முதல் 9.34 வரை

இலை பசுதுக்கும் உகவுக்கும் பொருந்தும்

அப்பூதியடிகள் குருபூஜைத் தினம்

## தமிழர்மீது தாக்குதல் மலையகத்தில் தொடர்கிறது

கொழும்பு, பெப், 10

மலையகத்தில் உள்ள கினிகத்தேனைப் பகுதியில் தமிழர்மீது தாக்குதல் நடத்தப்படுவதாக முறைப்பாடுகள் வெளிவந்துள்ளன.

வீதிகளில் நடமாடும் தமிழர்கள், காடையர்களால் இழுத்துச் செல்லப்பட்டு ஒதுக்குப் புறத்தில் வைத்துத் தாக்கப்படுகிருர்களாம்.

தமிழரின் வாகனங்கள் மீது கல்லெறியும் நடக்கிறதாம்.

தமிழர் சிலர் கொலை செய்யப்பட்டதாகவும் அஞ்சப்படுகிறது.

## கணேஷின் பூதவுடலை ஊர்வலமாக எடுத்துச் செல்ல அரசு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு, பெப்.10

பட்டிருப்புத் தொகுதியின் முன்னுள் எம். பி. திரு பூ. கணேசலிங்கத்தின் இறுதிச் சடங்குகள் இன்று (திங்கள்) பிற்பகல் 3 மணி அளவில் நடைபெறும். அவரது புதல்வன் முகுந்தன சிதைக்குத் தீ மூட்டுவார்.

மட்டக்களப்பு, கல்வியங்காடு மயானத்தில் இறுதிச் சடங்குகள் இடம் பெறும்.

கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் இறுதிக் கிரியைகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

### போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 10

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறையில் ஆயுதப்படையினருடன் நடத்திய நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று போராளிகள் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இதனை நேற்று அறிவித்தது.

யேசுதாஸ் (தருமராஜா), தெய்வேந்திர சிகாமணி (முரளி), அருள்ஞானதாஸ் (வேமன்) ஆகியோரே வீரமரணம் அடைந்தவர் என புலிகள் இயக்கம் அறிவித்தது.

### படையைக் கண்டு ஓட முயன்றவர் சுடப்பட்டார்

மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு, கல்லடியில் ஆயுதப்படையினரைக் கண்டு விட்டு ஓட முயன்ற ஒரு நபர் துப்பாக்கிக் குண்டு தாக்கி மரணமானர்.

அவரின் சடலம் இன்னமும் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்படவில்லை.

நபர் யாரென்று அடையாளம் காணப்படவில்லை.

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஓ

இன்றைய காலத்துக் கெடுபிடிகளில் சிக்கித் தவிக்காத, அச்சமெதுவுமற்ற, நிம்மதி நிறைந்த சூழலில்

# யாழ் பெருமக்கள்

# ரெலிபோன் அழைப்புக்களை

தாமதமின்றிப் பெற்றிடவும்,

அதிநவீன தன்னியக்க மின் **ரெலிபோன் சாதனங்களை**

நயமான விலைக்கு வாங்கவும் வசதி செய்து தரும்

# ரெலிகுளோப்!

திருவருள் துணைகொண்டு

**இன்று காலை சுபவேளை 7 மணிக்கு**

திருவாளர்கள்:

பேராசிரியர்
கலாநிதி சு. வித்தியானந்தன்
உப வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ். அரசாங்க அதிபர்

சீ. வீ. கே. சிவஞானம்
யாழ். மாநகர ஆணையாளர்

த. அம்பிகைராஜா
வட பிராந்திய தொலைத் தொடர்புப் பொறியியலாளர்

சிவதர்ம வள்ளல்
க. கனகராஜா
அதிபர், மில்க்வைற் தொழிலகம்

ஆகிய ஆன்றோர் தலைமையில் பல பெரியோர்களால் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பெறுகிறது.

செய்யும் தொழிலும் தெய்வம் என்ற கோட்பாட்டிற்கமைய, செருக்கற்ற செம்மையானதோர் சேவையை தமிழ்பேசும் பெருமக்களுக்கு பக்திசிரத்தையுடன் நல்கிடும் எனப் பணிவன்புடனும் வணக்கத்துடனும் தெரிவித்துக் கொள்கிறது

# ரெலிகுளோப்!

ஆர்.ஜி. கட்டிடம் - முதல் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ரெலெக்ஸ்: 22466 ரெலிபோன் 25088 (ஆறு தொடர்புகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

'இல்லை' என்ற சொல்லை நாம் இல்லையாக்க வேண்டும். 'சும்மா இரு' என்ற தத்துவத்தை நாம் உணர்வோ மேயானல் அதைவிட ஆனந்தம் வேறு எதுவும் இல்லை.

- வள்ளலார் சுவாமிகள்

உதயன்

உண்மை - அஞ்சாமை - தரு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24805 22073

10-02-86 த. பெ. 23

# நொண்டிச் சாட்டுக்கு இடம் வைக்க வேண்டாம்

தமிழ்ப் பெண்களைப் பெரும் எண்ணிக்கையில் கைதுசெய்யும் நடவடிக்கை ஆரம்பமாகி இருக்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பகுதியில் உள்ள இராமம் கட்டைபறிச்சான். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 42 இளம் பெண்களைப் பாதுகாப்புப் படையினர் கடந்த சனிக்கிழமை கைது செய்திருக்கின்றனர்.

அந்த இளம் தமிழ்ப் பெண்களில் வயது வந்த மாணவிகள், பருவப் பெண்கள், இளம் குடும்பப் பெண்கள் என்று பல தரத்தாரும் அடங்குவர்.

கைதான பெண்களின் பெற்றோரும் கணவன்மாரும் திருகோணமலை பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

பாதுகாப்புக்குப் பங்கமானவர்கள், வன்செயல்களோடு தொடர்பு உடையவர்கள் என்போரைக் கைதுசெய்யும் அதிகாரம் படையினருக்கு இப்போது உண்டு. சாதாரணகாலத்தில் இல்லாத அதிகாரத்தை அவசரகாலச் சட்டத்தின் மூலமும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமும் இப்போது படையினர் அனுபவிக்கிறார்கள். அந்த அதிகாரம் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவோ அல்லது தட்டிக்கேட்கவோ வழிதுறை ஏதும் இல்லை. அதற்கான சட்டக் கதவுகள் எல்லாம் பூட்டப்பட்டுவிட்டன.

அதன் விளைவு —

ஒன்றும் அறியாத அப்பாவி மக்களும் பயங்கரவாதச் சந்தேக நபர்கள் என்ற போர்வையில் கைதாகும் ஆபத்து இருந்து வருகிறது.

சாதாரண சட்டத்தின்கீழ், பொலீஸார், ஒருவரைக் கைது செய்தால் 24 மணித்தியால நேரத்திற்குள் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யவேண்டும். அவரது உத்தரவுடனேயே தடுப்புக்காவலில் வைக்கமுடியும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வந்த பின்னர் அந்த விதிமுறைகள் எல்லாம் இருட்டறைக்குள் புகுந்துவிட்டன.

அரசாங்கமும் பாதுகாப்புப் படையும் தாம் நினைத்தவாறு எதையும் செய்துவிட்டு அதனைச் சட்ட பூர்வமாக்கக் கூடிய சகல வாய்ப்புகளும் வசதிகளும்உண்டு.

செய்யக்கூடிய அநியாய அக்கிரமங்களை எல்லாம் செய்துவிட்டு, பயங்கரவாதச் சட்டம் என்ற போர்வைக்குள் சுகமாகக் குளிர்காயலாம்.

அதனால் தான் —

மூதூரில் கைதான இளம் தமிழ்ப் பெண்களுக்கு என்ன நடக்குமோ என்று நெஞ்சம் ஏங்குகிறது.

சந்தேகப் பேர்வழிகளாகப் பிடிக்கப்படும் தமிழ் இளைஞர்கள் எத்தகைய கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எதிலுமே சம்பந்தமில்லை என்று விடுவிக்கப்படுவோர் கூட அதற்கு முன் எத்தகைய சோதனைகளைக் களம் கண்டு வருகிறார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த விடயம்.

அதனால் தான் —

இளம் தமிழ்ப்பெண்களுக்கு என்ன நடக்கும் என அவர்களின் பெற்றோரும் கணவர்மாரும் அஞ்சுகிறார்கள்.

ஆண்களோடு பெண்கள் சம உரிமை உடையவர்கள் என்றாலும் அவர்கள், மெல்லியர்கள், கடும் தாக்கங்களைச் சகித்துக் கொள்ள முடியாதவர்கள் என்பது பொதுப்படை.

மேலும் ஒருபடி சென்று பார்த்தால் தமிழ்ப் பெண்களின் பெரும் சொத்து அவர்களது கற்பு. சரித்திர காலம் தொட்டு அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் தனி இடமும் பெற்றுத் தருவது அது தான்.

கைதானவர்கள் அனைவரும் வயது வந்த பெண்கள். அவர்கள் கற்புக்கு ஏது நடக்கும் என்பதை நினைத்தே பெற்றோரும் கணவர்மாரும் ஏங்குகிறார்கள்.

இந்தளவு பெரும் எண்ணிக்கையில் ஒரே வேளையில் தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்படுவதற்கு உரிய முகாந்திரம் இருந்ததா என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

பெண்களைக் கைது செய்வதும் இம்சைப் படுத்துவதும் சின்ன விஷயம் அல்ல. இதனை உணர்ந்து அரசு இவ்விஷயத்தைக் கவனமாகக் கையாள வேண்டும். அரசு அவ்வாறு பார்த்துக் கொள்ளுமா அல்லது நடப்பதை நடக்க விட்டுவிட்டு பின்னர் ஏதாவது தொண்டிச் சாட்டுச் சொல்லுமா?

# வடக்கு, கிழக்கு இணைப்பு கட்டாயம்

## வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ராஜீவிடம் கூட்டணி வலியுறுத்து

சென்னை, பெப். 9

இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை மையமாகக் கொண்டே இருக்கவேண்டும்.

இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் இது மீண்டும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கடைசியாக பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்த போதும் இதையே 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' ஆக வலியுறுத்திக் கூறினர்.

திரு. பண்டாரி இலங்கைக்குப் போவதற்கு முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தியை அவசரமாகச் சந்திக்க கூட்டணித் தலைவர்கள் நேரம் கேட்டிருந்தனர்.

தமிழ்நாட்டில் திருவையாற்றில் நடந்த தியாகராஜர் உற்சவத்தில் கலந்துகொள்ள வந்த சமயம் கூட்டணித் தலைவர்களுக்குப் பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

மூன்று தலைவர்களும் பிரதமருடன் ஒன்றாக விமானத்தில் டில்லி செல்லும்போது பேசிக் கொண்டனர்.

அச்சமயம் தான், வடக்கு - கிழக்கு இணைப்பு, இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வுக்கும் மையமாக இருக்கவேண்டும் என்பது பிரதமருக்கு வலியுறுத்தப்பட்டது. அச்சந்திப்பின்பின்னர் பிரதமர், பண்டாரியின் இலங்கை விஜயத்தை ரத்துச் செய்தது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து சென்ற கூட்டணிப் பிரமுகர்களைச் சந்தித்தபின்னர், கூட்டணித் தலைவர்கள் வடக்கு—கிழக்கு இணைப்பை மீண்டும் வலியுறுத்தி உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் இருந்து சென்ற கூட்டணிப் பிரமுகர்கள் வருமாறு:

1 திரு. ஆ. வேல்முருகு (அம்பாறை மாவட்டசபை முன்னாள் உறுப்பினர்)

2. திரு க. சம்பந்தமூர்த்தி (மட்டக்களப்பு மாவட்டசபை முன்னாள் தலைவர்.)

3. திரு. எஸ். அம்பலவாணர் (மட்டக்களப்பு மாநகரமுன்னாள்மேயர்.)

4 திரு. அல்பர்ட் சிவரத்தினம் (மட்டக்களப்பு மாவட்டசபை முன்னாள் உறுப்பினர்.)

## இன்று பேரணி பொதுக்கூட்டம் சுன்னாகத்தில்

சுன்னாகம். பெப், 10

சுன்னாகத்தில் இன்று மக்கள் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெறுகின்றன.

பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தும்— இராணுவ அத்துமீறல்களைக்கண்டித்தும்,பொது மக்கள் பாதுகாப்பை பேணவும்— சுன்னாகத்தில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதல்களைக் கண்டித்தும் இந்தப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடத்தப்படுகின்றன.

பேரணியில் சுன்னாகம், இணுவில், புன்னாலைக் கட்டுவன், மல்லாகம், ஏழாலை ஆகிய பிரதேசங்களில் உள்ள பிரஜைகள் குழுக்கள் உட்பட இருபத்தேழு பொது அமைப்புக்களும் பங்கு கொள்கின்றன.

சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோயில் முன்றலில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி, காங்கேசன் துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியூடாக மருதனார்மடம் செல்லும். அங்கு கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தும்.

## கைபொப்பம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

இலட்சத்துக்கு அதிகமான கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டுவிட்டன.

இன்னும் கையொப்பங்கள் அடங்கிய பட்டியல்கள் வந்துகொண்டு இருக்கின்றன.

இந்த நிலையில் கையொப்பம் இயக்கம் பற்றிய முன்னேற்றத்தை ஆராய யாழ் பிரஜைகளின் இணைப்புக்குழு பெப்ரவரி 13 ஆம் திகதி பகல் 1 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் கூடுகிறது.

## கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றத்தால் பொருட்காட்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளிலும் தொழில்நுட்பம் சம்பந்தமான விடயங்கள், மாதிரிகள் இக்கண்காட்சியில இடம் பெறும்.

எதிர்வரும் 21ஆம், 22ம் திகதிகளில் சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும் இக்கண்காட்சியில் விஞ்ஞான செய்தி படங்கள் திரையிடவும், கருத்தரங்குகளை நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## நீர்கொழும்பில் விழுந்த நெருப்புக் கோளம்

கொழும்பு, பெப். 10

நீர்கொழும்புப் பிரதேசத்தில் குரானா என்னும் இடத்தில் பிரகாசமான நெருப்புக் கோளம் ஒன்று வானில் இருந்து நிலத்தில் விழ்ந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழனன்று இரவு 8 – 30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இதனால் கட்டுநாயகா விமான நிலையத்தில் இருந்து அந்த நேரம் புறப்படவிருந்த கே. எல். எம் விமான சேவை இடைநிறுத்தப் பட்டது. விமானம் பயணிகளுடன் தாமதமாகவே பின்னர் புறப்பட்டுச் சென்றது.

இப்படி கட்டுநாயகா விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெருப்புக் கோளம் ஒன்று வானில் இருந்து கீழே வருவதைக் கண்டே விமானம் புறப்படுவது தாமதிக்கப்பட்டது.

இது பெரிய எரிநட்சத்திரமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

## வன்செயலால் இறந்தவரின் உறவினருக்கு நஷ்டஈடு அரசு வழங்குமாம்

திருகோணமலை பெப் 10

வன்செயல்களில் கொல்லப்பட்டவர்களின் நேரடி உரித்துடையவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரதேச உதவி அரசாங்க அதிபர் ஊடாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

திருமலை மாவட்ட புனர்வாழ்வு இணைப்புக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ இத்தகவலை வெளியிட்டார்.

அமைச்சு மேலதிக விபரங்களை அனுப்பியவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் வெளியிட்டார்.

**உதயனின் வார இதழ் சஞ்சீவி**

## தமிழ், சிங்கள அகதிகளுக்கு வீடு

திருகோணமலை, பெப் 10

வன்செயல்களால் வீடிழந்த தமிழ், சிங்கள அகதிகள் இணைந்து வாழ வீடமைப்புத்திட்டம் ஒன்று சேருவில என்ற இடத்தில் அமைக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சு இது சம்பநதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

## விவசாயி பலி

திருகோணமலை, பெப்.10

துப்பாக்கிக் குண்டு தாக்கி ஒரு விவசாயி மரணமானார்.

இச்சம்பவம் மூதூர்த் தொகுதியில் கட்டைப் பறிச்சான் கிராமத்தல் நடந்தது.

இறந்தவரின் பெயர், சின்னராசா கோபால சிங்கம், வயது 40.

ஆயுதப்படையினர் ரோந்து வந்த சமயம் இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

தப்பி ஓட முயற்சிக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

## கல்வி வளர்ச்சிக்கு வலய ஏற்பாடு

### அங்குரார்ப்பண விழாவில் பி. எஸ்

மானிப்டாய், பெப். 10

அண்மைக் காலங்களில் எமது நாட்டில் கல்வி வளர்ச்சிக்கான பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன, அதன் ஒரு அங்கமாகவே பாடசாலைகள் வலயங்களாக்கப்பட்டிருக்கின்றன.

உடுவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சி கருதி, கல்வி அபிவிருத்திக் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமைவகித்து உரையாற்றிய முன்னாள் யாழ் இந்துக்கல்லூரிஅதிபர்திரு பி. எஸ். குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டம் உடுவில் இராமநாதன்கல்லூரியில் நடைபெற்றது.

திரு. பி. எஸ். குமாரசாமி கழகத்தின் நோக்கம், செயற்பாடுகள் பற்றி எடுத்துக் கூறியதாவது:.

உடுவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் அமைவு, வேலைத் திட்டங்கள்,பாடவிதான அமைப்பு, நூல் நிலைய வசதிகள் போன்றவற்றில் ஏற்படும் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றை இலகுவாகத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும். பரீட்சைகள் – பெறுபேறுகள்— பயன்பாடு ஆகியவற்றை இணைத்து செயற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் இந்நோக்கங்களைக் கொண்டே இக் கழகம் இன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கடன்வழங்கு சபைச் செயலாளர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கமும் உரையாற்றினார்.

## தெரேசா அன்னையார் ஆனந்தக் கண்ணீர்

கல்கத்தா, பெப்.9

"எனது வாழ்விலே மிகவும் மகிழ்ச்சிகரமான நாள் இது.

நீண்ட காலமாக இதற்காகக் காத்து இருந்தேன்"

இப்படி அன்னை திரேஸா, பரிசுத்த பாப்பரசரிடம், ஆனந்தக் கண்ணீருடன் கூறினார்.

பாரத விஜயத்தின்போது பாப்பரசர், அன்னை திரேஸா நடத்தும் அனாதை விடுதிக்குச் சென்றிருந்தார்.

அன்னை திரேஸா, பாப்பரசரின் கைகளை முத்தமிட்டு வரவேற்றார். பாப்பரசரும் அது போன்று செய்தார்.

உருக்கமான நிகழ்ச்சியாக இது அமைந்து இருந்தது.



பொய்யாமொழி

குறள்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

பொருள்:

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

பாதுகாப்பு வலயம்

## தர்மிஷ்ட அரசு உயிர்களுக்கு அளிக்கும் மதிப்பு இதுதான்

### நவலங்கா சமசமாஜக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப் 10

அரசாங்கம் அண்மையில் பிரகடனம் செய்த பாதுகாப்பு வலயப் பிரகடனம், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுக்குச் சமமானது.

பாதுகாப்பு வலயத்தினுள் ஆயுதப் படையினரால் குடிமக்கள் கொல்லப்படுவதற்கு அரசு பொறுப்பாளி அல்ல என்று எச்சரிக்கப்பட்டு உள்ளது.

இதுதான் 'தர்மிஷ்ட' அரசாங்கம் மனித உயிர்களுக்குமதிப்புக் கொடுக்கும் லட்சணம்.

நவலங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணரத்ன, அமைப்புச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அண்மை அறிக்கைகளின்படி 4,000 தமிழர்களுக்குக் குறைவில்லாமல் கொல்லப்பட்டுள்ளார்கள்.

வயது, ஆண் – பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 2,000பேர் வரையில் குடும்பத் தலைவர்கள்.

சிங்கள ஆக்கிரமிப்பு ராணுவத்தைக்கொண்டு தமிழர்களை அழித்துவிட இலங்கை அரசு முயற்சிக்கிறதா என்றுகூட சந்தேகிக்கப்பட வேண்டியுள்ளது.

● தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆயுதப்படை முகாம்கள் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

● இராணுவத் தீர்வு காணுவது என்ற வீணான முயற்சியை நிறுத்த வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்வு ஒன்றுக்காக ஏங்கும் சகல இயக்கங்களும் முன்வர வேண்டும்.

இப்படி அந்தஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யாழ் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வழங்க அமைச்சு மறுப்பு

### சாரதி ஏமாற்றத்துடன் திரும்பினார்

நல்லூர், பெப் 10

யாழ் – ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வழங்க போதனா வைத்தியசாலைகள் அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

வடபகுதியில் இடம் பெறும் அசம்பாவிதங்கள் காரணமாகவும் அங்கு அரச வாகனங்களுக்கு பாதுகாப்பு இல்லாததாலுமே அம்புலன்ஸ் கொடுக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால் அம்புலன்ஸ் எடுத்துவர கொழும்பு சென்ற சாரதியும், ஊழியரும் ஏமாற்றத்துடன் யாழ் திரும்பியுள்ளனர்.

இந்த அம்புலன்ஸில் யாழ் – போதனா வைத்தியசாலை என்று பெயரும் பதிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

[illegible] அதனைக் கொடுக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாம்.

## தென் ஆசிய மக்கள் தம்முள் ஒத்துழைக்க வேண்டும்

### மாலைதீவில் பாரதப் பிரதமர்

மாலே, பெப். 9

தென்ஆசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்க நாடுகளின் மக்கள் பிராந்திய ஒத்துழைப்புப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலைதீவுகளின் தலைநகர் மாலேயில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மாநகர வரவேற்பு அளிக்கப்பட்டது

வரவேற்பிற் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

பாரதம், மாலைதீவுகள் மற்றும் 5 நாடுகள் அங்கம் வகிக்கும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் நாம்.

இந்த நாடுகளின் மக்கள் அனைவரும் தென் ஆசிய நாடுகளின் மக்கள் என்பது உணர்விற் கொள்ளப்பட வேண்டும் என்றார்.

மாலைதீவுகளின் அபிவிருத்திப் பயிர்களுக்குப் பாரதம் 1 கோடி ரூபா வழங்கச் சம்மதித்துள்ளது.

மாலைதீவு வெளியுறவு அமைச்சர் பாரதப் பிரதமரைச் சந்தித்துப் பல விடயங்கள்பற்றிப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உட்பட பல பிராந்தியப் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன.

## கனடாவில் ரயில் விபத்து

ஒட்டாவா, பெப். 9

கனடாவில் நிகழ்ந்துள்ள ரயில்விபத்தொன்றில் 40 பேர் இறந்துள்ளனர். 80 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

சேவையிலீடுபட்டிருந்த பிரயாணிகள் ரயிலுடன் சரக்கு ரயில்வண்டியொன்று மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!
புதிய சமூகக்கல்வி
7ஆம் ஆண்டு
1986 தை முதல் அமுல்படுத்தப்பட்ட பாடத் திட்டத்துக்கு அமைவானது.
ஆக்கம்: சி. நடராஜா B.A. Dip. in Ed
தொடர்புகளுக்கு: அம்பிகா கல்விச் சேவை
குரும்பசிட்டி – தெல்லிப்பழை.



# உதயன்

10 . 02 . 1986



வெளிவந்துவிட்டது!
புதிய சமூகக்கல்வி
7ஆம் ஆண்டு
1986 தை முதல் அமுல்படுத்தப்பட்ட பாடத் திட்டத்துக்கு அமைவானது.
ஆக்கம்: சி. நடராஜா B.A. Dip. in Ed;
தொடர்புகளுக்கு: அம்பிகா கல்விச் சேவை
குரும்பசிட்டி – தெல்லிப்பழை.


# தொண்டமானறில் தொடர்ந்து பதற்றம்

— கரவெட்டி செய்தியாளர்:- து. இராதாகிருஷ்ணன் —

கரவெட்டி, பெப். 10 தொண்டமானறில் பதற்றம் தொடர்கிறது.

சனிக்கிழமை அதிகாலை 2-00 மணியளவில் மோட்டார் தாக்குதல்கள் இடம்பெற்றன. இச்சம்பவம் சுமார் 45 நிமிடம்வரை நீடித்தது.

இதில் கடை ஒன்று பலத்த சேதம் அடைந்தது. இத்தாக்குதலின் போது அச்சுவேலியிலும் சில குண்டுகள் வந்து வீழ்ந்தன.

மீண்டும் சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## செங்கலடியில் தபால் நிலயக் கொள்ளை

மட்டக்களப்பு, பெப் 10 செங்கலடி தபால் நிலயத்தில் சுமார் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் 4 ஆயிரம் ரூபா பணமும் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

தபால் அதிபர் திரு. சி. தர்மராஜனின் வீட்டுக்கு இக் கோஷ்டி முதலில் சென்றது. அவரைப் பலவந்தமாகப் பயமுறுத்தி தபால் நிலயத்துக்குக் கொண்டு வந்தது.

தபால் நிலய உதவியாளர் மூவரும் அவர்களின் விடுகளில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

அவர்களைக் கொண்டு இரும்புப் பெட்டி திறக்கப்பட்டது. உள்ளே இருந்த பணத்தையும் முத்திரைகளையும் எடுத்துக் கொண்டு கோஷ்டி மறைந்தது.

### கண்டெடுத்தால்

சின்னத்தம்பி - ஆறுமுகம், கறுக்காய்த்தீவு, பூநகரி என்ற முகவரியிலுள்ள நான் 522951854 V என்ற இலக்கத்தையுடைய எனது அடையாள அட்டையைப் பண்டத்தரிப்புப் பகுதியில் தவற விட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆஸ்பத்திரி வீதி, மூளாய், சுளிபுரம் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப் 10 நேற்றுக்காலை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாப்பாமல், செம்பிமலை ஆகிய இடங்களில் விமானங்களில் இருந்து குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

சுன்னாகம், பெப். 10 தெல்லிப்பளை செல்வா ஐக்கிய கலாசார நிலயத்தின் பாலர் பாடசாலை ஆரம்ப விழா இன்று காலை 8-00 மணிக்கு நடைபெறுகிறது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா கலந்து சிறப்பிப்பார்.

## சிப்பாய் தற்கொலை

திருகோணமலை, பெப். 10 திருகோணமலை கோட்டை இராணுவ முகாமில் ஒரு சிப்பாய் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத்தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம்நேற்றுஅதிகொலை5.30மணியளவில் இடம் பெற்றது.

இறந்த சிப்பாயின் பெயர் எச். ஏ.ஸி. குணரத்ன. வயது 24

மனவிரக்தி காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என்று திடீர் மரணவிசாரணை அதிகாரி ஜனாப். அலி அக்பர் தீர்ப்பளித்தார்.

## சாக்கும் கொள்ளை

கொழும்பு, பெப். 10 நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான மன்னார் அலுவலகத்தில் பெருந்தொகையான வெற்றுச்சாக்குகள் இனந்தெரியாதோரால் கொள்ளை இடப்பட்டன.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

## மூதூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லும் போது வனஜா நல்ல சுகதேகியாக இருந்தார்.

பின்னர் இரவு 11மணியளவில் பொலீஸார் வனஜாவை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டனர்.

மறுநாள் காலை வனஜாவை பொலீஸ் நிலயம் கொண்டு வர வேண்டும் என்று அச்சமயம் பொலீஸார் கூறிச் சென்றனர்.

பேச, நடக்க முடியாத நிலையில் வனஜா காணப்பட்டார்.

மறுநாள் காலை 7 மணியளவில் மீண்டும் வனஜாவை பொலீஸ் நிலயத்தில்விட்டுவிட்டு பாடசாலைக்கு நான் சென்றேன்.

காலை 11 மணியளவில் பொலீஸார் பாடசாலைக்கு வந்து வனஜாவுக்குக் கடும் சுகயீனம்; வந்து கூட்டிப் போகும்படி என்னைக் கேட்டனர்.

நான் பொலீஸ் நிலயம் சென்ற சமயம் வனஜா, சித்தப்பிரமை பிடித்தவர் போல் காணப்பட்டாள். பேச, நடக்கமுடியாத நிலயிலும் இருந்தார்.

வனஜாவை நான் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளேன்.

"அடிக்கிறான்கள், அடிக்கிறான்கள்"—என்று மகள் வீரிட்டுக் கத்துகின்றார்.

இச்சம்பவம்பற்றிவிசாரணை நடத்தி உதவும்படி வேண்டுகின்றேன்.—

இப்படி திரு. லகுநாதன், பிரஜைகள் குழுவுக்குச் சமர்ப்பித்த முறைப்பாட்டில் கேட்டுள்ளார்.

வனஜாவுடன் கைதான ஏனைய இளம் பெண்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

## கணேஷின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கு பற்றுவர்.

அமைச்சர் தொண்டமானும் பங்குபற்றக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் காலை அவரது பூதவுடல் சொந்த ஊரான பெரியகல்லாறுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஊர்வலமாக எடுத்துச் செல்ல பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கவில்லை.

அதன் காரணமாக உறவினர்கள் மட்டுமே பூதவுடலுடன் சென்றிருந்தனர்.

நேற்று மாலையே பூதவுடல் தாமரைக்கேணிக்குக் கொண்டு வரப்பட்டது.

அரச அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து, கல்முனை, சம்மாந்துறை எம். பிக்களான ஜனாப் ஏ. ஆர். மன்சூர், ஜனாப். ஏ. எல். அப்துல் மஜீது, முன்னாள் எம்.பி. ஜனாப் எம். எம். முஸ்தபா உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

## கண்ணிவெடி அகப்பட்டது

கொழும்பு, பெப். 10 வவுனியாவில் வீதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியை பொலீஸார் அகற்றினர்.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமான தொழில் நுட்ப அதிகாரி பிரம்மானந்தா என்பவரின் [illegible] விசாரணை செய்துவிட்டு திரும்பிய [illegible] பொலீஸார், இக் கண்ணி வெடியை அகற்றினர் என்று தெரிகிறது.

## ஒக்ஸ்போர்ட் கருத்தரங்கில் பேச லலித் மறுத்துவிட்டார்

கொழும்பு, பெப். 10 'குழப்ப நிலையில் உள்ள ஒரு தீவு' – என்ற தலைப்பில் லண்டனில் நடத்தப்படவுள்ள கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நிராகரித்துவிட்டார்.

ஒக்ஸ்போர்ட் மாணவர் யூனியன் இக் கருத்தரங்கை பெப்ரவரி 22 ஆம் திகதி நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

'பல இன மக்கள் வாழும் நாட்டில் சிங்கள பௌத்த தேசிய வாதம்'–என்ற தலைப்பில் பேசும்படி திரு. அத்துலத் முதலி அழைக்கப்பட்டிருந்தார். அந்த அழைப்பையே அமைச்சர் நிராகரித்தார்.

இக்கருத்தரங்கில் பேச அழைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ்ப் பிரமுகர்களும் அவர்கள் பேசவுள்ள தலைப்புகளும் வருமாறு;

- டாக்டர் நீலன் திருச்செல்வம்: 'பல இன மக்கள் வாழும் நாட்டில் தமிழ்த் தேசியம்'
- கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம்: 'தமிழர் பயமும் அவர்களின் அபிலாஷைகளும்,
- பேராசிரியர் ஏ.ஜே. வில்ஸன்: 'இலங்கையும் அதன் எதிர்காலமும்'

இக்கருத்தரங்கு ஒக்ஸ்போட் மாணவர் யூனியன் தலைவர் செல்வி ஜே. ஆர். வில்ஸன் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் ஏ. ஜே. வில்ஸனின் மருமகள் தான் செல்வி வில்ஸன்.

## 'ரெலி குளோப்' திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 10 'ரெலி குளோப்' தொலைத் தொடர்பு நிறுவனம் இன்று காலை அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது.

யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், வட பிராந்திய தொலைத் தொடர்புப் பொறியியலாளர் திரு. த. அம்பிகைராஜா, தொழிலதிபர் திரு. க. கனகராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள ஆர். ஜி. கட்டடத்தின் முதல் மாடியில் ரெலி குளோப் நிறுவனம் அமைந்துள்ளது.

இந்தநிறுவனத்தில் ஆறு தொலைபேசித் தொடர்புகள் இருக்கும். ரெலக்ஸ் வசதியும் உண்டு.

உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான தொலைபேசிஅழைப்புக்களைபெற உதவும் இந்த நிறுவனம், அதி நவீன தன்னியக்க மின் ரெலிபோன் [illegible]ங்களை விற்பனை செய்வதிலும் ஈடுபடும்.

இதன் உரிமையாளர் திரு. எம். சிவராசா.

## அடிக்கல் நாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 10 அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் நிறுவும் கம்பன் தமிழ்க் கோட்டத்தின் அடிக்கல் நாட்டு விழா இன்று (திங்கட்கிழமை) மாலை நடைபெறுகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்குவார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள் ஆசியுரை வழங்குவார்.

ஈழநாடு நிர்வாக ஆசிரியர் திரு. ந. சபாரத்தினம் தொடக்கவுரை நிகழ்த்துவார். பல பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்

## என்ஜின் ஒயில் கொள்ளை

நேற்று முன்தினம் இரவு யாழ். பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வான் ஒன்றில் சென்ற [illegible] கோஷ்டி ஒன்று 22 ஆயிரம் ரூபா பெறுமதியான என்ஜின் ஒயிலை கொள்ளையடித்துச் சென்றது.


## நவா மினி (உஷா மினி முன்பாக)

CHURCHILL'S LEOPARDS



புதிய படப் போஸ்ரர்கள், டடக்கொப்பிகள் விற்பனைக்கு, வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.


## 63 ஆம்ஆண்டு பூர்த்திதினம்

— திரு பொன்னுத்துரை —



கிழக்கு கரம்பொன் அம்பலவரின் பேரனும் அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் நாகராசா முத்துலிங்கத்தின் சகோதரரும் சரவணை சுந்தரம் தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் (பிள்ளை) கணவரும் வள்ளியம்மை செல்லம்மாவின் பெருமகனும் புஸ்பராணி சந்திரசேகரத்தின் தந்தையும் சந்திரசேகரம் (செல்வம்) மாமனும் சுரேஸ்குமார் துளசிகரனின் பேரனுமாகியவரும் முன்னைநாள் வவுனியா கச்சேரி ரேயல் தேவி அரசினர் பாலப்பகுதி கார்கோ போட் டிஸ்பாச் கம்பனியில் கடமையாற்றியவருமான திரு. பொன்னுத்துரை தன் 63ஆம் ஆண்டு பூர்த்தியை கொண்டாடுவதுடன் கடந்து வந்த பாதையையும் சோதனையையும் சாதனையையும் நினைவு கூருகின்றார்.

உரிமையாளர்
பாலா பான்சி ஹவுஸ்,
ஊர்காவற்றுறை,


அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 10 . 2 . 1986


# விளையாட்டரங்கு

உலக சாம்பியன்களான

## இந்தியா தோல்வி!

### ஆஸ்திரேலியாவிடம் மண்கவ்வியது

மெல்பேர்ன். பெப்,9 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்மும்முனை உலகக் கிண்ண கிரிக்கட்போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியா தோல்வியடைந்தது.

சர்வதேச உலகக் கிண்ண சாம்பியன்களான இந்தியாவை மூன்று நாடுகள் சுற்றுப் போட்டியில் மண்கவ்வ வைத்தது ஆஸ்திரேலிய அணி

நேற்று மெல்பேர்னில் நடைபெற்ற இறுதிச் சுற்றின் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றியீட்டியதன் மூலம் ஆஸிஅணி உலகக் கிண்ணத்தை தன்னுடன் தக்க வைத்துக் கொண்டது.

ஆஸி, நியூஸிலாந்து, இந்திய அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றின.

இறுதிச் சுற்றுக்கு இந்திய, ஆஸி அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

இறுதிச் சுற்று மூன்று ஆட்டங்களாக நடக்க ஏற்பாடகியிருந்தது.

சிட்னியில் நடைபெற்ற இறுதிச் சுற்றின் முதலாவது ஆட்டத்தில் ஆஸி ஏற்கனவே வெற்றி பெற்றிருந்தது.

நேற்று இரண்டாவது ஆட்டத்தில் ஆஸிவெற்றி பெற்றதன் மூலம் மூன்றாவது இறுதி ஆட்டம் நடைபெற முன்னரே அது சுற்றுப்போட்டியில் தனது வெற்றியை உறுதி செய்து கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஒதுக்கப்பட்ட ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸி அணி தனக்கு வழங்கப்பட்ட ஓவர்கள் முடிவடைவதற்கு 16 பந்துவீச்சுகள் இருக்கும் வேளையில் மூன்று விக்கெட் இழப்புக்கு அந்த ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஆட்டத்தில் வெற்றிபெற்றது.

## கூடைப்பந்தாட்டம்; இன்று அரை இறுதி

யாழ்ப்பாணம், பெப்.10 யாழ்ப்பாணம் கிறிஸ்தவ இளைஞர் சங்கம் (வை. எம். சி. ஏ) நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

முதலாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணம் றிம்மர் விளையாட்டுக் கழக அணியுடன் வை. எம் சி ஏ. அணி மோதும்.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி, பரி யோவான் கல்லூரி அணியுடன் மோதும்.

இந்த ஆட்டங்கள் இன்று மாலை யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும்.

## பல்கலைக்கழகம் வெற்றி

### 39 ஓட்டங்களில் சுருண்டது பற்றிக்ஸ்

விளையாட்டுச் செய்தியாளர்;- சண். ஜோண்சன்

யாழ்ப்பாணம்,பெப் 10 நேற்று நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை தோற்கடித்தது

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையிலான இந்த ஆட்டம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி யாழ் பல்கலைக்கழக அணியினரின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியது.

24. 2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்த சென் பற்றிக்ஸ் அணியினால் 39 ஓட்டங்களைமட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆர். மகிந்தா 14 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களையும் எஸ் எல். பி. மெலனியஸ் 12 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் பல்கலைக்கழக அணி 16.3 ஓவர்களில் 1 விக்கட்டை மாத்திரம் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

எம்.சி.சேரமான், எஸ். சகிதரன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 18,10 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக ஆர். செல்வரெட்ணம், எஸ். விமலதாசன் ஆகியோர் கடமையாற்றினர்.

## காசிநாதர் ராஜினமா!

மட்டக்களப்பு பெப் 10 மட்டக்களப்புப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. பிரின்ஸ் காசிநாதர் பதவியில் இருந்து ராஜினமாச் செய்தார்.

நேற்றுநடந்த குழுவின் பொதுக்கூட்டத்தில் திரு. காசிநாதர் ராஜினமாவைச் சமர்ப்பித்தார்.

ஆயுதப்படையினர் ஒத்துழைப்புத் தராததால் பயனுள்ள சேவைகளை ஆற்ற முடியாமல் உள்ளது. இப்படி திரு காசிநாதர் தனது ராஜினமாவுக்கான காரணத்தை பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.

பிரஜைகள் குழுவின் புதிய தலைவராக சட்டத்தரணி திரு. கே தங்கவடிவேலும் செயலாளராக சட்டத்தரணி திரு. சாம். தம்பிமுத்துவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம். பெப்,10 கடந்த வெள்ளிக்கிழமை யாழ்நகரில் கடத்தப்பட்ட இரு வர்த்தகர்களும் நேற்று இரவுவரை விடுதலை செய்யப்படவில்லை என யாழ் வர்த்தக சங்கம் தெரிவித்தது.

## சிப்பாய் தற்கொலைகள் தொடர்கிறது

கொழும்பு, பெப். 10 பதவியா இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவரின் பெயர் விக்கிரமசிங்கா. வயது 26.

இவர் அடிக்கடி லீவு எடுத்து வந்தார்.

இதை மேலதிகாரி கண்டித்தாராம்.

மனம் வேதனை அடைந்த நிலையில் சிப்பாய் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார்.

## நீத்தார் பட்டியல்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த

### திருமதி பவளம்மா ஐயாத்துரை

காலமாகிவிட்டார்

இவர் கதிரிப்பிள்ளை ஐயாத்துரையின் (ஐயா) அன்பு மனைவியும் பத்மநாதன், பத்மலிங்கம், நற்குணநாதன், கணேசலிங்கம் ஆகியோரின் தாயாரும் மகிழம்பா, இந்திராணி, நேசம்மா, தர்மகுமாரி, ஆகியோரின் மாமியாரும் வசந்தி, பத்மகுமார், பத்மரஞ்சன், பத்மஸ்ரீ, பத்மலீலா, பத்மஹரன், கௌரி, கஜன், வாசுகி, கௌதமி, துஷ்யந்தன், அனுஷா, கௌசல்யா, அகல்யா, அகிலன், அரவிந்தன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை 3-00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஐ. பத்மநாதன்
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org